**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.**

**இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

*K.S. பாலச்சந்திரன்*

# கலைஞர் இராமநாதன் சடகோபன்

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

'வெளிக்கிடடி விசுவமடுவுக்கு' என்ற நகைச்சுவை நாடகத்தை ஈழத் தமிழர்கள் இலகுவில் மறந்திருக்க முடியாது. எழுபதுக ளில் அரியாலை திடீர் நாடக மன்றத்தால் பட்டி தொட்டிகள் எங்கும் 1000 தடவைக-ளுக்கு மேல் மேடையேறி அனைவரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த நாடகம். இந்த நாடகத்தின் கதை, காட்சிகளை உருவாக்கம் செய்து, அதில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்ததோடு இந்நாடகத்தின் முழுப் பொறுப்பாளராகவும் தொடர்பாளராகவும் செயற்பட்டவர் எமது கலைஞர் இராமநாதன் சடகோபன் அவர்கள்.

பாடசாலை நாட்களிலேயே இவர் நாடகங்க ளில் நடிக்கத் தொடங்கினார். இவரது முதல் நாடகம் 'பக்தப் பிரகலாதன்' ஆகும். ஸ்ரான்லிக் கல்லூரியில் 9வது வகுப்புப் படிக்கும் போது இந்நாடகத்தில் ஒரு முனிவராகத் தோன்றி னார். இந்நாடகம் வடமாகாண ரீதியில் பாடசாலைகளுக்கு இடையேயான நாடகப் போட்டியில் 2வது பரிசைப் பெற்றது.

சிறுவயதிலேயே இவர் நாடகக்கலையில் ஆர்வம் கொண்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏனெனில் இவரது தந்தையார் காலஞ்சென்ற இராமநாதன் அவர்கள் அரியாலையின் தலை சிறந்த பழம்பெரும் நாடகக் கலைஞர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். அவர் 1935இல் மேடையேறிய 'குந்தளப்பிரியா' விலிருந்து நூறுக்கு மேற்பட்ட நாடகங்களில் பங்கேற்

**ஆழத்து முத்துக்கள் 51**

றவர். வெண்ணிறச் சேலை அணிந்து ஔவை யாராகவும், மற்றும் கூனியாகவும் தோன்றிய அவரது நடிப்பு இன்றும் என் மனக்கண் முன் நிழலாடுகிறது.

சடகோபன் அவர்கள் சிலகால அமைதிக்குப் பின்னர் யாரும் எதிர்பாராத வகையில் ஒரு நகைச்சுவைப் புயலாகப் பரிணமிக்கத் தொடங்-கினார். நண்பர்கள் சிலரை இணைத்துக் கொண்டு அரியாலை திடீர் நாடக மன்றத்தை உருவாக்கினார். அவர்களது முதல் நாடகம் 'அபசகுணம்' ஆகும். இந்நாடகத்தில் வயது வந்த ஆனால் விவேகம் இல்லாத பிள்ளை யாக வந்து கலகலப்பூட்டினார். குழந்தை போல் விரலை வாயில் வைத்துக்கொண்டு 'ஓடிப்பிடித்து விளையாட ஒரு தம்பிப் பாப்பா வேனும்' என்று இவர் பாட தந்தையாக வந்த பரமநாதன் 'ஆகட்டும் மகனே அதுக்கென்...' என்று பதில் பாட்டுப் பாட அரங்க வெளி அதிரும்.

இவர்களது அடுத்த நாடகம் தான் 'வெளிக் கிடடி விசுவமடுவுக்கு' இந்நாடகத்தில் இவருடன் பரமநாதன், நாகராஜா, லோகு, மகேந்திரன், பொன்னுக்கிளி, இராசேந்திரம் ஆகியோர் நடித்திருந்தனர். ஸ்ரீமாவோவின் காலத்தில் படித்த வாலிபர்களுக்கு விசுவ-மடுவில் இலவசமாகக் காணிகள் வழங்கப்-பட்டதை மையமாக வைத்து உருவான நாடகம் அது. மேடையில் நடக்கும் வேலிச் சண்டைக்காகவே அந்நாடகத்தைப் பலதட-வைகள் நான் பார்த்ததுண்டு. பெண்சாதிமார் சண்டை பிடிக்க புருஷன்மார் ஓடி ஒளிப் பதும் பிறகு "யாரடி சொன்னது எனக்குப் பயமெண்டு" என்று வெளியே வருவதும் பெரும் அமர்க்களமாக இருக்கும். சடகோபன் இதில் மனைவியாகப் பாத்திரம் ஏற்றிருந்தார்.

இந்நாடகம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திரு-கோணமலை, கொழும்பு ஆகிய இடங்களில் மேடையேறி எல்லோரது வரவேற்பையும் பெற்றது. இந்நாடகத்தின் 1000வது மேடை-யேற்றம் அடம்பனில் நடந்த களியாட்டு விழாவில் நடைபெற்றது. மேலும் இரத்தினக் கல் கூட்டுத்தாபன ஆதரவில் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற மேடை யேற்றத்தின் போது இவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். சிலவேளைகளில் ஒரு இரவில் மூன்று மேடையேற்றங்களையும் இந்நாடகம் கண்டுள்ளது.

அரியாலை திடீர் நாடகமன்றத்தின் மூன்றா வது நாடகமான 'உடையாரின் உபத்திரவ'த்-தில் இவர் பெண் பாத்திரம் ஏற்று நடித்தி-ருந்தார். இறந்து போன உடையார் சாக்கினுள் இருப்பது தெரியாமல் சாக்கைக் கொண்டு திரிவதும் அதன் போது ஏற்படும் உபத்திரங் களும் தான் இந்நாடகத்தின் கரு.

அரியாலை திடீர் நாடக மன்றத்தின் இரு பெரும் தூண்களாக இருந்தவர்கள் நாகராஜா, பரமநாதன் ஆகியோர். அவர்களது அங்க அசைவுகளும், பகிடிகள் சொல்லும் விதமும் அலாதியானது. மக்களைச் சிரிக்க வைத்த இவ்விருவருவரின் இழப்பை பேரிழப்பாகக் குறிப்பிடுகிறார் சடகோபன் அவர்கள்.

நகைச்சுவை நாடகத்தில் கொடிகட்டிப் பறந்த சடகோபன் அவர்கள் அரியாலை சுதேசிய விழாவில் பிரதான நாடகங்களில் பங்கேற்று நடிப்பில் வேறு ஒரு பரிமாணத்தை எய்தினார். சரித்திர, இதிகாச, புராணப் பாத்திரங்கள் எதுவாயினும் அதில் சோபிக்கும் ஒரு இயல்-பான நடிகர் கலைஞர் சடகோபன் அவர்கள்.

1993இல் சுதேசிய விழாவில் மேடையேறிய இராஜராஜ சோழன் நாடகத்தில் இராஜேந் திரனாகத் தோன்றினார். 26 நடிகர்கள் நடித்த இந்நாடகம் 4 மணித்தியாலம் வரை நீண்டது. இதுவரை நகைச்சுவைப் பாத்திரங்களையே ஏற்றிருந்த இவர் இராஜராஜ சோழன் நாட கத்தின் சிறந்த நடிகருக்கான தங்கப்பதக் கத்தைப் பெற்றதன் மூலம் தன்னை ஒரு சகல பாத்திரங்களிலும் வல்லவனாக நிலை நிறுத்தினார். அன்றிலிருந்து சககலைஞர்க-ளின் வேண்டுகோளுக்கு இணங்க நகைச் சுவை நாடகங்களில் நடிப்பதை நிறுத்திக் கொண்டார்.

1994இல் இடம்பெற்ற 75வது சுதேசிய விழா-வில் மேடையேறிய எல்லாளன் நாடகத்தில் இராஜகுரு என்ற வில்லனாக எல்லோரையும் அசரவைத்தார். 1995இல் இலங்கேஸ்வரன் நாடகத்தில் இலக்குவணனாக தொடர்ந்து சங்கிலியனில் காக்கைவன்னியனாக, சகுந்-தலையில் புருஷோத்மனாக, சேரன் செல்வி யில் பாண்டிய மன்னனாக, கர்ணனில் குந்திதேவியாக இவர் ஏற்ற பாத்திரங்கள் ஏராளம்.

சடகோபன் அவர்களின் 25வது சரித்திர நாடக மான பாதுகை இவரது வாழ்வின் மறக்க முடியாத நாடகமாகும். ஏனெனில் பாதுகை யில் இவர் இராமராகவும், கூனியாக இவரது தந்தையார் இராமநாதன் அவர்களும் நடித் திருந்தனர். தந்தையும் மகனும் ஒரே நாட கத்தில் நடிப்பது, நாடகம் பழகுதல் என்பன மிகவும் அரிதாக நடக்கின்ற விடயமே. பாதுகை நாடகத்தில் பொ. விஜயரட்ணம் பரதனாகவும், ச. உருத்திரேஸ்வரன் தசரத-னாகவும் நடித்துச் சிறப்பித்தனர்.

சுதேச விழாவின் நாடகப் போட்டிக்காக இவர் தம்மாஸ்தி என்ற அழகியாக வேடமேற்ற 'உயிரோவியம்' என்ற அலெக்சாண்டர் மன்னன் பற்றிய நாடகம் குறிப்பிடத்தக்க-தாகும். மன்னரின் காதலி தன்னை ஓவியம் வரைந்த அப்பெல்லஸ் என்ற ஓவியன் மேல் காதல் கொள்ள, இதை அறிந்த மன்னன் ஓவியனைக் கொல்லவரும் காட்சியில் இவரது நடிப்பு உச்சத்தைத் தொடும்.

1997இல் இடம்பெற்ற யாழ்ப்பாண இடப்பெயர் வின் போது தனது தந்தையைக் காலனிடம் பறிகொடுத்த சோகத்தையும் மீறி, இன்று



வரை அந்த மண்ணில் வாழ்ந்து கொண்டு, மருவி வரும் எமது நாடகக் கலை வடிவங் களை அழியாது, பாதுகாத்து வருவதோடு தொடர்ந்தும் மண்ணின் சுதேசிய நாடகங்க ளில் பங்குபற்றி வரும் கலைஞன் இராம-நாதன் சடகோபன் அவர்களின் கலைச்சேவை மென்மேலும் வாழ, வளர வாழ்த்துவோம்.



sriskandan@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்-களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்-வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

**உங்கள் நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும் பதிவு செய்வதற்கும்**

**www.inayam.net**